08.09.2023.

OS.No.88/2020

PW 1- மாடசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.09.2023.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : ( பிரதிவாதி தரப்பில்)

13. வா.சா.ஆ.14 ல் தபசில் சொத்தானது அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டது என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ரூ.1000 முதலீடு செய்து மேற்படி அறக்கட்டளை உருவாக்கப்பட்டதாக வா.சா.ஆ.14 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதுதபசில் சொத்துக்கள் 4 ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதல்ல என்பதால் வழக்கில் நீங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

14. 1 முதல்3 பிரதிவாதிகள் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் வழியாக சொத்தின் சுவாதீனம் மற்றும் பாத்தியம் ஆகியவற்றை 4 ம் பிரதிவாதிக்கு ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.ஆனால்வாய்மொழியாக கொடுத்துள்ளார்கள். 1 முதல் 3 மற்றும் 4 ம் பிரதிவாதிக்கு இடையே பிறப்பித்துக்கொள்ளப்பட்டதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையிலும் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாய்மொழியாக கொடுத்துள்ளார்கள்.

15. எந்ததேதியில், நீங்கள் சொல்வதுபோல் வாய்மொழியாக கொடுத்தார்கள் என்றால் 2019 ம் ஆண்டு நவம்பர் மாதம் கொடுத்தார்கள். எப்படி கொடுத்தார்கள் என்றால் 5 செண்ட் வாய்மொழியாகவும், 8 செண்ட் கிரையம் மூலமாகவும் கொடுத்தார்கள். 8 செண்ட் கிரையம் மூலமாக கொடுப்பதற்கு எவ்வளவு கிரைய தொகை பெறப்பட்டது என்றால் ரூ.4 லட்சம் பெறப்பட்டது.

16. நோட்டரி பப்ளிக் முன்னிலையில் எழுதப்பட்ட அனுபவ ஆவணத்தில் மேற்கண்ட விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த நோட்டரி பப்ளிக் ஆவணத்தை அடிப்படையாக கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீங்கள் குறிப்பிடும் 5 செண்ட் இடம் அருணாசல நாயக்கர் கிரையம் வாங்கிய 8 செண்ட் இடத்திற்கு அடுத்த மேற்குபக்கமாக உள்ளது என்றால் சரிதான். இந்த 5 செண்டில்தான் கோவில் சார்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. மேற்படி 5 செண்ட் இடத்திற்கு மேற்குபக்கம் மற்றும் தெற்குபக்கம் நீங்கள் குறிப்பிடும் 8 செண்ட் இடம் இருப்பதாக கட்சி செய்கிறீர்கள் என்றால் சரிதான். இந்த 8 செண்டில் மேற்குபக்கம் எத்தனை செண்ட் உள்ளது அதைபோல் தெற்குபக்கம் எத்தனை செண்ட் உள்ளது என்றால் தெற்குபக்கம் 4.4 செண்டும், மேற்குபக்கம் 3.4 செண்டும் உள்ளது.

18. வழக்குரையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து விவரத்திற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துவிவரமும் தவறானது என்றால் சரியல்ல. நீங்கள் குறிப்பிடும் கோவில் எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் 2003 ல் கட்டுமானம் கட்டப்பட்டது. ஆனால் அதற்குமுன்பே கோவிலுக்கு இடம் சுப்பையா முதலியார் கொடுத்துவிட்டடார்.

19. ஆனால் வா.சா.ஆ.10 ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கில் மேற்படி கோவில் இருப்பதாக சொல்லப்பபடவில்லை என்றால் எனக்கு தெரியாது. கோவிலுக்கு பாத்தியப்பட்ட அடிமனை இடத்தை ஜெகன்நாதன் என்பவர் நடராஜன் வகையாறவுக்கு கோவிலுக்காக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் செல்லாது என சொல்லிதான் வா.சா.ஆ.10 ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20. வா.சா.ஆ.10 ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எதுவும் உங்களது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. போய் வந்துகொண்டு இருக்கிறோம். பிராது தபசில் சொத்திற்கு வடக்குபக்கம் சுவர் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்குபக்கமாக சென்றுவருகிறோம்.

21. நீங்கள் குறிப்பிடும் கட்டிடத்தின் சாவி இருக்கிறதா என்றால் 4 ம் பிரதிவாதியிடம் உள்ளது. மேற்படி கட்டுமானத்திற்கு தீர்வை மற்றும் மின்கட்டண ரசீது செலுத்தப்படுகிறதா என்றால் ஆமாம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். மேற்படி தீர்வை மற்றும் மின்இணைப்பு ரத்து செய்யப்ட்டுள்ளது என்றாலும், மேற்படி கட்டிடத்தின் அனுபவம் பிரதிவாதியிடம் உள்ளது என்பதாலும் நீங்கள் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**22. மறுவிசாரணை இல்லை**

ஒம்/-கே.பாஸ்கர்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

தென்காசி.